முருகப்பெருமான் துணை

**மகான் திருமங்கை ஆழ்வார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

04.09.2022, ஞாயிற்றுக்கிழமை

1. வானவர் போற்றும் தரும சேவை
வள்ளலாய் ஆற்றும் அரங்கனே
ஞான தேசிகனே உன் பெருமை கூறி
ஞாலமதில் அருளாசி தன்னை
2. தன்னையே சுபகிருது யாளி திங்கள்
தக்கபடி மூவாறோர் திகதி கதிர்வாரம்
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 19 நாள், 04.09.2022 ஞாயிற்றுக்கிழமை)
நன்னயமாய் திருமங்கை ஆழ்வாரும்
நாட்டிடுவேன் உலகோர் நலம்பெற
3. நலம்தரும் ஞானவான்கள் படை
நாடெங்கிலும் உருவாக்கும் வண்ணம்
பலம்தரும் சன்மார்க்க நெறியை
பாமரரும் ஏற்று வரும்படி அருளும்
4. அருளும் அரங்கன் வழி
அகிலம் மாற்றும் உயர் வழி
வரமாக கலியுகமக்கள் தானும்
வணங்கி அரங்கன் பதம் பணிய
5. பணியவே வினைகள் விலகும்
பரிபக்குவம் நிலைகள் கூடி
தணிகை வேலனை வணங்கும்
தனித்துவமும் ஆற்றலும் தேறி
6. தேறியே கலித்துன்பம் விரட்டி
தெய்வபலம் கொண்டவர்களாக
அறிவுத் தெளிவு ஞான பலமுடன்
அறியாமை வென்று அழியாமை மிக்க
7. மிக்கநல் உயர் மக்களாகியே
மேலவர் அரங்கன் வழிவழி
தேக்கமின்றி ஞானிகள் ஆவர்
தேசம் காக்கும் சக்திகளாவர்
8. ஆவரே அகிலம் எங்கிலுமே
அளவிலா ஞானவான்களை
யுவராஜன் விரும்பும் வண்ணம்
உருவாக்கி தொண்டர் பெருமக்கள்
9. மக்களெல்லாம் மாண்பு படைப்பர்
மரணம் வெல்லும் வரம் தனை
ஆக்கமுடன் அனைவரும் அடைய
அற்புதமான சேவை புரிவர்

10. சேவையெனும் அரங்கன் தருமம்
சித்திமிகு உயர்வழி ஆகும்
அவனியே இந்த சேவை வழி
ஆற்றல் கண்டுவிட பேருலகம்

11. பேருலகம் பெரும் பாதுகாப்பும்
பெருமை மிக்க ஞானவான்கள்
அருமைபட ஆளும் காலமாகும்
அறிவித்த அருளாசி முற்றே

–சுபம்–